27th July 1964]

Rice Mill

* 735 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any proposal has been received from the Union Government for setting up a modern rice mill in the State; and

(*b*) the details of the decision taken by the State Government, regarding the same?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) இல்லை.

(இ) வினா எழாது.

திரு. கே. ஏ. மதியழகன் : தனியார் துறையில் இனிமேல் எந்த ரைஸ் மில்களும் ஆரம்பிக்க அனுமதி கொடுப்பதில்லை என்று சர்க்கார் ஏதேனும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அப்படி ஒன்றும் இன்னும் குறிப்பாக உத்தரவு வரவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : மக்கள் கைக்குத்தல் அரிசியைத்தான் சாப்பிடவேண்டுமென்று அரசாங்கம் பிரசாரம் செய்து வருகிறது. அப்படி இருக்கும்போது ஏன் மில்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப் படுகிறது ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். தண்டாயுதபாணி : தஞ்சை மாவட்டத்தில் திருவாரூரில் ஒரு அரிசி மில்லை அரசாங்கத்தார் ஏற்படுத்துவதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது. அது உண்மையா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அதற்கான ஏற்பாடு இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : கைக்குத்தல் அரிசி சாப்பிடும் முறை இப்போது நம் நாட்டிலே பரவலாக இல்லை. ஏதோ நோயாளிகள் சாப்பிடுகிறார்கள். ரைஸ் மில்லுக்குப் பர்மிட் கொடுக்கும் முறை ஊழல் பொருந்தியதாக இருக்கிறது. அதை உணர்ந்து லைசென்ஸ் கொடுக்கிற முறையை ரத்து செய்யும் நிலைமையை மத்திய சர்க்காருக்கு உணர்த்துவார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. மு. கருணாநிதி : உணவு நிலையில் வளர்ச்சி காண பேசிய டில்லி அமைச்சர் ஒருவர் நவீன அரிசி ஆலைகளைத் தமிழகத்தில், குறிப்பாக தஞ்சாவூரில் திருவாரூரில் வைப்பதற்கு முயற்சி நடைபெறுகிறது என்று பேசியதாகச் செய்தி வந்திருக்கிறது. அதற்குத் திட்டம் இன்னும் வரவில்லையா ? மாநில அரசாங்கம் அதில் ஈடுபடுமா ?

[27th July 1964

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : தஞ்சையில் அவ்வாறு ஒன்றை ஏற்படுத்த முயற்சி நடந்து கொண்டு வருகிறது. அதற்கு தஞ்சாவூர் பெடரேஷனைச் சேர்ந்த தலைவர் கூட வேண்டிய காரியங்களைச் செய்து வருகிருர்.

திரு. எம். தண்டாயுதபாணி : திருவாரூரில் ஆரம்பிக்கப்பட இருக்கும் அந்த மில்லை அரசினரே ஏற்படுத்த இருக்கிருர்களா? அதனுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : போர்டு பவுண்டேஷன் மூலம் ஆரம்பிப்பதாக இருக்கிரேம்.

* 736 கேள்வி.— **திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவு அரிசி மில்கள் ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

(இ) எந்தெந்த மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) ஆம்.

(இ) இந்தத் திட்டம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : தமிழ் நாட்டில் சிதம்பரம், நாமக்கல், ராசிபுரம், கூட்டுறவு அரிசி ஆலைகளில் பங்கு பெற்றிருக்கிருர்களா? அந்த ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டனவா? இல்லையென்ருல் ஏன் காலதாமதப்படுகிறது?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : என்னிடத்தில் தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, with a view to establish rice mills in the co-operative sector, have the Government issued any instructions to the Board of Revenue and the Collectors not to issue licence for private persons?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அந்த விதமாக ஒன்றும் இல்லையென்று முதல் கேள்விக்கே பதில் சொன்னேன்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணுமூர்த்தி கவுண்டர் : புதிதாக இனிமேல் ரைஸ் மில்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்று மத்திய உணவு அமைச்சர் திரு. சுப்பிரமண்யம் அவர்கள் சொன்னதாக பத்திரிகையில் படித்தேன். அதன் நிலைமை என்ன?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அப்படி சொன்னதாக எனக்குத் தெரியவில்லை.

MR. SPEAKER : The hon. Member cannot contradict the Hon. Minister for Food on the basis of a newspaper report of what the Hon. Minister for Food in the Centre has said.